**நாகொட பிரதேச சபை - 2022**

---------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாகொட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நாகொட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 462,240 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் கொள்வனவு செய்திருந்த ரூபா 90,350 இற்கான நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் பாதைகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த 24 பெயர் | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பலகைகளுக்காக ரூபா 199,200 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதனை இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (இ) | சபையின் தகனசாலை நிர்மாணிப்பதற்காக 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 12,121,842 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதனை காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஓய்வூதிய பங்களிப்புத் தொகைக்காக ரூபா 88,884 தொகை குறைவாக கடன் கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது அப்புறப்படுத்தப்பட்ட மற்றும் ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்பட்ட ரூபா 88,970 தொகை பெறுமதியான சொத்துக்கள் மற்றும் பெறுமதியினை இனங்காண முடியாத 37 விடயங்கள் 2022 ஆண்டின் நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 70,384 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் போது பதவழிக்கப்பட்டிருந்த வாடகை வட்டி மற்றும் கடையறை வாடகை ரூபா 3,045,728 தொகை காணப்பட்ட போதிலும், கணக்கீடு செய்யப்பட்டுள்ள பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,972,093 தொகை ஆக காணப்பட்டமையால் பெற வேண்டிய வருமானம் ரூபா 1,073,635 தொகை மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 2,104,389 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 135,482,676 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | அட்டவணைகள் எதிர்காலத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை
### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவுகள் 23 மற்றும் 24 | பாதைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 3,220,655 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,944,200 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்
#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பீட்டு வருமானம் | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 865,000 | 1,063,469 | 1,186,032 | 399,641 | 801,000 | 986,126 | 921,636 | 522,204 |
| வாடகை | 4,476,000 | 1,813,560 | 6,633,804 | 617,641 | 4,325,000 | 5,810,673 | 3,122,615 | 5,437,885 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 551,000 | 965,740 | 1,696,452 | - | 691,500 | 1,405,015 | 1,320,931 | 730,712 |
| ஏனைய வருமானங்கள் | 1,710,000 | 780,242 | 1,191,152 | 14,801,129 | 1,066,500 | 1,070,037 | 983,141 | 15,212,039 |
| மொத்தம் | 7,602,000 | 4,623,011 | 10,707,440 | 15,818,411 | 6,884,000 | 9,271,851 | 6,348,323 | 21,902,840 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மொத்த வருமானம் ரூபா 21,902,840 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 15,818,411 தொகையாக இருந்தது. | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நீதிமன்றத்திற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சிய மீதிகளை அறவீடு செய்யப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஏக்கர் காணியை துப்புறவு செய்து அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 427,830 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 02 ஏக்கர் அளவு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு மீதியான சுமார் 03 ஏக்கர்களும் பயிர் செய்கை ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை. | பயிர் செய்கை செய்யப்படாத பகுதியில் காடுகள் மீண்டும் வளர்ந்துள்ளன என. | காணிகளை ஆக்கபூர்வமாக பொருளாதார அலுவல்களுக்காக பயன்படுத்த வேண்டும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் வருடாந்தம் தனது அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல் பலகை தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு அதற்கான கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட கட்டணம் உரிய முறையில் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**3.3 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைத் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 15,443,193 தொகை பெறுமதியான இரண்டு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | மீதியான வேலைகளுக்காக அமைச்சிலிருந்து ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் செயற்திட்டங்கள் நிறுத்தப்பட்டன என. | செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்ய வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிருவாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வலகும்புர தகனசாலை நிர்மாணிப்பதற்காக ரூபா 12,121,841 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், முன்னேற்றம் 25% குறைந்த எண்ணிக்கையில் காணப்பட்டது. செயற்திட்டத்தை பூரத்தி செய்யப்படாமல் பாதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடம் சுற்றாடலுக்கு வெளிப்படுத்தப்பட்டு துருப்பிடிக்கும் ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டதுடன், நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டுள்ள பகுதிகள் பாதுகாப்பற்று காணப்பட்டது. | கட்டிடத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக கூரை நிர்மாணித்தல் அத்தியவசியமாக காணப்பட்டமையால் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டவுடன், அந்த விடயங்கள் மேற்கொள்ளப்படும் என. | செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்ய வேண்டும். |